# கல்வியாளர் அணி - மாற்றுத் திறனாளிகள் அணி! புதிய பிரிவு சேர்த்தல் - கழக பொதுக்குழு ஒப்புதல்!

**01-06-2025 அன்று**

**மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில்"**

**நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில்**

**கழக சட்டதிட்ட திருத்தக்குழுச் செயலாளர் திரு. இரா.கிரிராஜன், எம்.பி., அவர்கள்**

**வைத்து நிறைவேற்றப்பட்ட சட்டத்திட்ட திருத்தங்கள்**

### புதிய பிரிவு சேர்த்தல்

**விதி 31:**

**பிரிவு : 21**

### கல்வியாளர் அணி

தமிழ்நாடு மாணவர்களுக்கு கல்வியின் தேவையையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறி, அவர்கள் கல்வி பயில வேண்டியதன் அவசியத்தைப் பரப்பவும், அறிவியல் சார்ந்த அறிவார்ந்த கல்வி முறையைத் தேர்ந்தெடுத்துப் படிப்பது எந்தளவுக்கு அவர்களது வாழ்வியலை வளமாக்கும் என்பதை எடுத்து சொல்லவும், கல்வியில் இடைநிற்றலை தடுத்து நிறுத்திடவும், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் நலன் கருதி கல்வியாளர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்களைக் கொண்ட கல்வியாளர்கள் அணி உருவாக்கப்படும். இந்த அணி தலைமைக் கழகத்தின் ஆலோசனை பெற்றுச் செயல்படும்.

### புதிய பிரிவு சேர்த்தல்

**விதி 31:**

**பிரிவு : 22**

### மாற்றுத் திறனாளிகள் அணி

தங்களுடைய அறிவாற்றலால் பல்வேறு திறன்களைப் பெற்றுள்ள மாற்றுத் திறனாளிகள் அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கும் - சமுதாயத்தில் கல்வி, வேலைவாய்ப்புக்களை முறையாகப் பெறும் வகையிலும் மாற்றுத்திறனாளிகளின் நலன் மற்றும் உரிமைகளுக்காக மாற்றுத் திறனாளிகள் அணி உருவாக்கப்படும். இந்த அணி தலைமைக் கழகத்தின் ஆலோசனை பெற்றுச் செயல்படும்.

**பிரிவு எண் மாற்றம்**

தற்போதுள்ள 'சார்பு மன்றங்கள்' எனும் தலைப்பிலான பிரிவு விதி 31 - பிரிவு 21; இனி பிரிவு 23 ஆக மாற்றப்படும்.

# தி.மு.க. தலைமைக் கழக கணக்கு தணிக்கை குழு அறிக்கை தாக்கல் பொதுக்குழு ஏற்பு!

தி.மு.க. தலைமைக் கழகத்தின் 1.11.2019 முதல் 31.3.2025 முடிய உள்ள 5 ஆண்டு 5 மாதங்களுக்கான தணிக்கைக் குழுவின் அறிக்கையை பொதுக்குழுவில் தணிக்கைக் குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி அவர்கள் வாசித்தார்.

பொதுக்குழுவில் இந்த தணிக்கைக்குழு அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஈரோடு மத்திய மாவட்ட

# இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் சிறப்புரை!

ஈரோடு, ஜூன் 2 -

ஈரோடு மத்திய மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய - நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 30.05.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் கலந்துகொண்டு, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.

ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சன் சுரேஷ் வரவேற்புரையாற்றினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் எம்.பி., பி.எஸ்.சீனிவாசன், மாநில நெசவாளர் அணிச் செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலைத்தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகி களுக்கு பயிற்சி வழங்கினர்.






ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (31.5.2025) சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, மாநகராட்சி மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# மதுரையில் தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம்! 27 வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானங்களின் தலைப்புகள்!

## பொதுக்குழு உறுப்பினர்கள் கரவொலி எழுப்பி வரவேற்றனர்!

**மதுரை, ஜூன் 2 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று மதுரையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் 27 வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத் தீர்மானங்களின் தலைப்புகள் இங்கே வெளியிட்டுள்ளோம். அது வருமாறு:-**

| எண். | தலைப்பு |
|---|---|
| 1. | முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளை செம்மொழி நாளாக நாடெங்கும் கொண்டாடுவோம்! |
| 2. | மக்களின் பேராதரவுடன் தொடர் வெற்றி நாயகராகத் திகழும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுகள்! |
| 3. | இந்தியாவுக்கே முன்னோடியாக மகளிர் வாழ்வை மேம்படுத்தும் திராவிட மாடல் அரசு! |
| 4. | உழவர்கள் - நெசவாளர்கள் - மீனவர்கள் என அனைத்துத் தரப்பினரின் வாழ்விலும் புதிய விடியல் தந்த திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பரப்புவோம்! |
| 5. | தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த தலைவர்களைப் போற்றும் கழக அரசுக்குப் பாராட்டு! |
| 6. | ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்றுள்ள திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களைத் தொடர்ந்து மக்களிடம் எடுத்துரைப்போம்! |
| 7. | தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையாக மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள துணை முதலமைச்சர் - இளம் தலைவர் அவர்களின் பணி தொடரத் துணை நிற்போம்! |
| 8. | ஏழை - எளிய மக்களை வதைக்கும் நகைக்கடன் கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி உடனே நீக்க வேண்டும்! |
| 9. | தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய அரசுக்குக் கண்டனம்! |
| 10. | தமிழர்களின் மொழி உணர்வுடன் விளையாடாமல் இந்தித் திணிப்பைக் கைவிடுக! |
| 11. | கீழடி ஆய்வை மறுக்கும் தமிழ் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்! |
| 12. | இரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம்! |
| 13. | சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிக்கும் நோக்கில் இசுலாமியர் சொத்துக்களைச் சூறையாடும் வக்பு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுக! |
| 14. | ஒன்றிய விசாரணை அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்! |
| 15. | மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் தொடரும் அநீதிகள்! |
| 16. | மீனவர்கள் நலன் காக்க கச்சத்தீவை மீட்டிடுக! |
| 17. | சாதிவாரிக் கணக்கெடுப்பை விரைவாகவும் முறையாகவும் நடத்திடுக! |
| 18. | தமிழ்நாட்டின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை கூடாது! |
| 19. | ஆளுநரின் அதிகார வரம்பை வரையறுத்து மாநில உரிமையை நிலைநாட்டிய உச்சநீதிமன்ற தீர்ப்புக்குக் காரணமான கழகத் தலைவருக்குப் பாராட்டு! |
| 20. | குடியரசுத் துணைத் தலைவரின் விமர்சனத்திற்குக் கண்டனம்! |
| 21. | அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்காமல் உச்சநீதிமன்றத்தோடு மோதும் பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்! |
| 22. | உச்சநீதிமன்றத் தீர்ப்பை முன்வைத்துக் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் இணைத்திடுக! |
| 23. | மலரட்டும் மாநில சுயாட்சி! |
| 24. | பேரிடர் மீட்புப் பணியில் கழக அரசுடன் கழகத்தினரும் துணை நிற்போம்! |
| 25. | எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என அழகிய தமிழ்ப்பெயர்களைச் சூட்டுவோம்! |
| 26. | அ.தி.மு.க. ஆட்சியின் அவலமான பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு வரவேற்பு! |
| 27. | வஞ்சக பா.ஜ.க.வையும் துரோக அ.தி.மு.க.வையும் விரட்டியடித்து 2026இல் கழக ஆட்சி தொடர களப்பணியைத் தொடங்குவோம்! |